Rediffusion/Edelman

Coverage Report: TCS IT Wiz – Chennai Edition

**Publication:** Dina Malar
**Date:** 19/08/2016
**Edition:** Chennai
**Page No:** 3
**Headline:** Puducherry boys win IT Quiz competition

# தகவல் தொழில்நுட்ப வினாடி – வினா புதுச்சேரி மாணவர்கள் அசத்தல்

சென்னை, ஆக. 19–
சென்னையில் நடந்த தகவல் தொழில்நுட்ப வினாடி – வினா போட்டியில், புதுச்சேரி கேந்திரிய வித்யாலயா மாணவர்கள் சாம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

கடந்த, 1999ம் ஆண்டு முதல், சென்னை உள்ளிட்ட இந்தியாவின், 15 மாநகரங்களில், டி.சி.எஸ்., சார்பில், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வினாடி – வினா போட்டிகள் நடத்தப்படுகின்றன.

எட்டாம் வகுப்பு முதல், பிளஸ் 2 வரை படிக்கும் மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்பம், அறிவியல், கணிதம் சார்ந்த அறிவை வளர்க்கும் நோக்கில் இந்த போட்டிகள் நடத்தப்படுகின்றன.

தமிழகம், புதுச்சேரி மாநிலங்களுக்கு இடையிலான இறுதி வினாடி – வினா போட்டி, நேற்று, மியூசிக் அகாடமியில் நடந்தது. அதில், 64 பள்ளிகளில் இருந்து, 629 அணியினர் பங்கேற்றனர்.

அதில், 40 மதிப்பெண்களை பெற்று, புதுச்சேரி கேந்திரிய வித்யாலயா மாணவர்களான ஜெ.ஜெயகிருஷ்ணன், ஏ.கோகுல்ராஜன் ஆகியோர் சாம்பியன் பட்டத்தை பெற்றனர். அவர்களுக்கு தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இதே மாணவர்கள், கடந்த ஆண்டு, தேசிய அளவில் நடந்த வினாடி – வினா போட்டியில் வென்று, இரண்டாம் இடம் பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய போட்டியில், இரண்டாமிடத்தை, 25 மதிப்பெண்கள் பெற்று, சென்னை மகரிஷி வித்யாமந்திர் பள்ளியின் ஜி.பிரணவ் ஹரி, ஹரி கே.மாதவன் ஆகியோர் பெற்று, வெள்ளிப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசுகளை வென்றனர். தேசிய அளவிலான போட்டி வரும் டிசம்பரில் நடக்க உள்ளது.

அமெரிக்க – சென்னை துாதரக அதிகாரி பிலிப் எ கிம், டி.சி.எஸ்., தலைமை தொழில்நுட்ப அதிகாரி அனந்தராமகிருஷ்ணன் ஆகியோர், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்.




சென்னையில் நடந்த தகவல் தொழில்நுட்ப வினாடி – வினா போட்டியில், புதுச்சேரி கேந்திரிய வித்யாலயா மாணவர்கள் சாம்பியன் பட்டம் வென்றனர். அவர்களுக்கு பட்டம் வழங்கிய [இடது ஓரம்] டி.சி.எஸ்., தலைமை தொழில்நுட்ப அதிகாரி அனந்தராமகிருஷ்ணன், அமெரிக்க – சென்னை துாதரக அதிகாரி பிலிப் ஏ கிம்.